www.Padasalai.Net www.CBSEtips.in

NEW SYLLABUS


பிரிலியண்ட்'ஸ்

# சமூக அறிவியல்

இலவசம்

வரைபட பயிற்சி புத்தகம்

9



- பாடநூல் வினாக்கள் விடைகளுடன்.
- கூடுதல் வினாக்கள் விடைகளுடன்.
- காலாண்டு, அரையாண்டு மற்றும் முழுஆண்டு மாதிரி வினாத்தாள்கள்.
- அரசு மாதிரி வினாத்தாள்



100% SUCCESS

BRILLIANT PUBLICATIONS®
Madurai Tamilnadu.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிரிலியண்ட்'ஸ்

# சமூக அறிவியல்

# 9

(தமிழ்நாடு அரசு புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது)

**சிறப்பு அம்சங்கள்**

- ★ பாடநூல் வினாக்கள் விடைகளுடன்
- ★ கூடுதல் வினாக்கள் விடைகளுடன்
- ★ காலாண்டு, அரையாண்டு மற்றும் முழு ஆண்டு மாதிரி வினாத்தாள்
- ★ அரசு மாதிரி வினாத்தாள்

கூடுதல் வரைபட பயிற்சி புத்தகம்

(இரண்டு புத்தகங்களின்) **விலை: ரூ.180/-**

© All rights reserved

**பிரிலியண்ட் பப்ளிகேஷன்ஸ்®**
20/13, வடக்கு சித்திரை வீதி, மதுரை – 625001.
போன்: 9442563752, 9843363752, 9487563752, 9443063752

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# பொருளடக்கம்


| அலகு | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம் | 5 |
| 2 | பண்டைய நாகரிகங்கள் | 12 |
| 3 | தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும் | 20 |
| 4 | அறிவு மலர்ச்சியும், சமூக – அரசியல் மாற்றங்களும் | 28 |
| 5 | செவ்வியல் உலகம் | 35 |
| 6 | இடைக்காலம் | 43 |
| 7 | இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும் | 51 |
| 8 | நவீன யுகத்தின் தொடக்கம் | 59 |
| 9 | புரட்சிகளின் காலம் | 68 |
| 10 | தொழிற்புரட்சி | 77 |
| 11 | ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதக்கம் | 85 |
| | **புவியியல்** | |
| 1 | நிலக்கோளம் – I புவி அகச்செயல்பாடுகள் | 94 |
| 2 | நிலக்கோளம் – II புவி புறச்செயல்பாடுகள் | 104 |
| 3 | வளிமண்டலம் | 116 |
| 4 | நீர்க்கோளம் | 128 |
| 5 | உயிர்க்கோளம் | 137 |
| 6 | மனிதனும் சுற்றுச் சூழலும் | 147 |
| 7 | நிலவரைபடத் திறன்கள் | 155 |
| 8 | பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல் | 164 |


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## குடிமையியல்


| | | |
|---|---|---|
| 1 | அரசாங்கம் அமைப்புகள் மற்றும் மக்களாட்சி | 170 |
| 2 | தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் | 178 |
| 3 | மனித உரிமைகள் | 185 |
| 4 | அரசாங்கங்களின் வகைகள் | 195 |
| 5 | உள்ளாட்சி அமைப்புகள் | 200 |
| 6 | சாலை பாதுகாப்பு | 206 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| 1 | மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை | 209 |
| 2 | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு | 218 |
| 3 | பணம் மற்றும் கடன் | 226 |
| 4 | தமிழகத்தில் வேளாண்மை | 233 |
| 5 | இடம்பெயர்தல் | 239 |


## பருவத் தேர்வுகள்


| | | |
|---|---|---|
| 1 | காலாண்டு மாதிரி வினாத்தாள் | 245 |
| 3 | அரையாண்டு மாதிரி வினாத்தாள் | 248 |
| 5 | முழு ஆண்டு மாதிரி வினாத்தாள் | 251 |
| 6 | அரசு மாதிரி வினாத்தாள் 2019 – 2020 | 254 |


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# சமூக அறிவியல்

## ஒன்பதாம் வகுப்பு

# வரலாறு


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# அலகு 1 மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது
அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி
இ) உராங் உட்டான் ஈ) பெருங்குரங்கு
**விடை: ஆ) சிம்பன்ஸி**

2. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம் .......... .
அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்
**விடை: இ) புதிய கற்காலம்**

3. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ................. ஆவர்.
அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்
**விடை: இ) ஹோமோ சேபியன்ஸ்**

4. எகிப்து, இஸ்ரேல்–பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி .......... எனப்படுகிறது.
அ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு ஆ) பிறைநிலப் பகுதி
இ) ஸோலோ ஆறு ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு
**விடை: ஆ) பிறைநிலப் பகுதி**

5. சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் ................. கருவிகளை முதன்முறையாக கண்டுபிடித்தார்.
அ) நுண்கற்காலம் ஆ) பழங்கற்காலம்
இ) இடைக் கற்காலம் ஈ) புதிய கற்காலம்
**விடை: ஆ) பழங்கற்காலம்**

6. i) எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.
ii) வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.
iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.
iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி
இ) (i) மற்றும் (iv) சரி ஈ) (ii) மற்றும் (iii) சரி
**விடை: இ) (i) மற்றும் (iv) சரி**

7. i) செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.
ii) புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது.
iii) புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.
iv) விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.
அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (ii) மற்றும் (iii) சரி ஈ) (iv) சரி
**விடை : அ) (i) சரி**


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**8. கூற்று :** தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக் கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**காரணம் :** நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.

அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**விடை: ஈ) கூற்றும் காரணமும் தவறானவை**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கை கோடரிகளும் வெட்டுக் கருவிகளும் ............. பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்.

**விடை: கீழ்ப் பழங்கற்காலப்**

2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் ................. தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன.

**விடை: கற்கருவித்**

3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் .................. எனப்படும்.

**விடை: இடைக் கற்காலம்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள ‘தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்’ என்ற கருத்து உதவுகிறது.

ஆ) ‘உயிர்களின் தோற்றம் குறித்து’ என்ற நூலை ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.

இ) உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த டார்வின் கோட்பாடு இயற்கைத் தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.

ஈ) கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும்.

**விடை: அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள ‘தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்’ என்ற கருத்து உதவுகிறது.**

2. அ) குரங்கினங்களில் உராங் உட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.

ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

இ) செதிலை கருவிகள் செய்ய பயன்படுத்த முடியாது.

ஈ) சிறு செதில்கள் தயாரிக்கப் பயன்படும் மூலக்கல் அச்சூலியன் எனப்படும்.

**விடை: ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.**

## IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பழங்கால மானுடவியல் | அ) தேரி |
| 2. | கோடரிக்கருவிகள் | ஆ) வீனஸ் |
| 3. | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | இ) அச்சூலியன் |
| 4. | செம்மணல் மேடுகள் | ஈ) நுண்கற்காலம் |
| 5. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | உ) மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு |



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 1. | பழங்கால மானுடவியல் | உ) மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு |
| 2. | கோடரிக்கருவிகள் | இ) அச்சூலியன் |
| 3. | கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் | ஆ) வீனஸ் |
| 4. | செம்மணல் மேடுகள் | அ) தேரி |
| 5. | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | ஈ) நுண்கற்காலம் |

## V. சுருக்கமான விடை தருக.

**1. ஊகக் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?**

- பரிணாம வளர்ச்சிப் போக்கில் மனிதர்கள் உணர்தல் நிலையையும் அறிவாற்றலையும் கொண்டவர்களாக மாறினார்கள்.
- அவர்கள் இயற்கை, தம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் மற்றும் உலகம் குறித்துச் சிந்திக்கவும் கேள்வி எழுப்பவும் தொடங்கினர். இவ்வாறு சிந்தனைகளின் காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக மாற்றியது.

**2. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு தருக.**

- ஆடு, மாடுகளை பல்வேறு வீட்டு உபயோகத்திற்காக வளர்த்தனர்.
- கால்நடைகளைக் கவர்வது போர்களுக்கும் அத்துமீறல்களுக்கும் வழிவகுத்தது.

**3. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.**

பெருங்கற்காலத்தில் கற்திட்டை, கல்லறைகளில் ‘போர்ட் ஹோல்’ எனப்படும் இடுதுளை ஒன்றை ஆன்மா வந்து செல்ல அமைத்தனர்.

i) டோல்மென் எனப்படும் கற்திட்டைகளில் புதைத்தல்.
ii) சிஸ்ட் எனப்படும் கல்லறைகளில் புதைத்தல்.
iii) தாழிகள், குகைகள், சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகளில் புதைத்தல் என்று பலவகைகளில் புதைத்தனர்.

**4. கருவி செய்வதில் கீழ்ப் பழைய கற்கால மக்களிடமிருந்த தொழில்நுட்பத்தைத் திறனாய்வு செய்க.**

- கீழ் பழங்கற்காலப் பண்பாடு காலத்தில் அச்சூலியன் வகைத் தொழில் நுட்பம் பின்பற்றப்பட்டது.
- பெரிய கற்களைச் செதில்களாகச் சீவி கைக்கோடரி, வெட்டுக் கத்தி உள்ளிட்ட பல்வேறு கருவிகளைச் செய்தார்கள்.
- இருபுறமும் செதுக்கப்பட்டதால் இக்கருவிகள் இருமுகக் கருவிகள் என்றும் பிரான்சில் உள்ள செயின்ட் அச்சூல் என்ற இடத்தில் முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால் அச்சூலியன் கருவிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. விவசாயம், பானை செய்தல், உலோகக் கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சி பெருங்கற்காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும் – உறுதிப்படுத்தவும்**

- பெருங்கற்கால மக்கள் இரும்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினர். நல்ல பண்பாடு வளர்ச்சி அடைந்தது.
- தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் குடியேறினர். மக்களிடையே பரிமாற்ற உறவுகள் வளர்ந்தன. விவசாயம், மட்பாண்டம் செய்தல் மற்றும் உலோகக் கருவிகள் செய்வதில் ஏற்பட்ட வளர்ச்சி மனித வரலாற்றில் மிக முக்கியமான மாற்றமாகும்.

**விவசாயம்:**

- ஆடு, மாடுகளை பயன்படுத்தினர். தினையும் நெல்லும் பயிரிடப்பட்டன. நதிகள், குளங்களுக்கு அருகே ஆற்றுப் படுகைகளில் பாசன தொழில் நுட்பம் வளர்ந்தது.

**பானை செய்தல்:**

- மட்பாண்டங்கள் சமையல், பொருள்களைச் சேமிப்பதற்கு, சாப்பிடுவதற்கு எனப் பயன்படுத்தப்பட்டன, கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் உள்ளே கருப்பாகவும் வெளியே சிவப்பாகவும், பளபளப்பாகவும் காணப்படும்.


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**உலோகக் கருவிகள் செய்தல்.**

- பெருங்கற்காலக் கல்லறைகளில் இரும்பு மற்றும் வெண்கலக் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. வாள், குறுவாள், கோடரிகள், உளிகள், விளக்குகள், முக்காலிகள் கிடைத்துள்ளன. வெண்கலக் கிண்ணங்கள், விலங்கு, பறவை வேலைப்பாடுள்ள கலங்கள், வெண்கல முகம் பார்க்கும் கண்ணாடி, மணிகளும் கிடைத்துள்ளன.
- இக்கருவிகள் வேளாண்மைக்கும், வேட்டையாடுதலுக்கும், உணவு சேகரிப்பதற்கும் போர்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

**2. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது – தெளிவுப்படுத்துக.**

- மனிதர்களின் வரலாற்றைப் புவியின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாது.
- புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் காலகட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல்,
- உயிரியல் பதிவுகள் பொதிந்துகிடக்கின்றன. இவ்வடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைபடிவங்கள் புதைந்துள்ளன.
- தொல்மானுடவியல் அறிஞர்களும், தொல்லியல் அறிஞர்களும், புவியின் மண் மற்றும் பாறை அடுக்குகளை அகழ்ந்து, மனித மூதாதையர்கள் குறித்த சான்றுகளைச் சேகரிக்கின்றார்கள்.
- இதன் மூலம் மனித வரலாற்றின் பரிணாம வளர்ச்சி நிலைகள் மற்றும் அவற்றின் காலகட்டம் அறியப்படுகிறது.
- தொல்லியல் மூலம் தொல்பொருள்களை ஆராய்ந்து, விளக்கமளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்து ஆராயப்படுகிறது.
- புவி சுமார் 4.54 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கருதப்படுகிறது. (ஒரு பில்லியன் = 100 கோடி).

## கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. வரலாற்றின் தந்தை எனக் கருதப்படுபவர்.**

அ) ஆர்க்கிமிடிஸ் ஆ) அரிஸ்டாட்டில்
இ) ஹெரோடோடஸ் ஈ) வாஸ்கோடகாமா

**விடை: இ) ஹெரோடோடஸ்**

**2. தொல் பொருட்களை ஆராய்ந்து விளக்கம் அளிப்பதன் வழியாக மனிதர்களின் கடந்த காலம் குறித்த ஆராயும் இயல்**

அ) தொல்லியல் ஆ) மானிடவியல்
இ) மண்ணடுக்கியல் ஈ) பரிணாமவியல்

**விடை: அ) தொல்லியல்**

**3. ஆஸ்ட்ரோலோபித்திசின்கள் என்பதற்கு .................... என்று பொருள்.**

அ) மேற்கத்திய மனித குரங்கு ஆ) கிழக்கத்திய மனித குரங்கு
இ) தெற்கத்திய மனித குரங்கு ஈ) வடக்கத்திய மனித குரங்கு

**விடை: இ) தெற்கத்திய மனித குரங்கு**

**4. அச்சூலியன் வகை கைகோடாரிகள் முதன் முதலில் ........... நாட்டில் கண்டெடுக்கப்பட்டன.**

அ) இத்தாலி ஆ) கனடா இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

**விடை: ஈ) பிரான்ஸ்**

**5. மேல் பழங்கற்கால பண்பாடு .................... ஆண்டுகளுக்கு முன் தோன்றியது**

அ) 20000 ஆ) 30000 இ) 50000 ஈ) 60000

**விடை: ஈ) 60000**

**6. அத்திரம்பாக்கத்தில் நடந்த தொல்லியல் ஆய்வுகளும் காஸ்மிக் கதிர் ஆய்வுகளும் அங்கு ................ ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்து இருப்பதை காட்டுகின்றன.**

அ) 2 மில்லியன் ஆ) 1.5 மில்லியன்
இ) 2.5 மில்லியன் ஈ) 3 மில்லியன்

**விடை: ஆ) 1.5 மில்லியன்**


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

7. பூமிக்கடியில் இருந்து வெளிப்படும் உருகிய எரிமலைக் குழம்பில் இருந்து தோன்றியவை
அ) பசால்ட் பாறைகள் ஆ) படிவுப் பாறைகள்
இ) உருமாறிய பாறைகள் ஈ) இடைப்பாறைகள்
**விடை: அ) பசால்ட் பாறைகள்**

8. .................... என்பது மண்ணில் புதைக்கப்படும் கல்லறை போன்றது.
அ) டோல்மென் ஆ) சிஸ்ட்
இ) சார்க்கோபேகஸ் ஈ) மென்ஹிர்
**விடை: ஆ) சிஸ்ட்**

9. ........... காலக்கட்டத்தில் நுண் கருவிகள் எனப்படும் குறும்படங்களும் பயன்பாட்டிற்கு வந்தன.
அ) கீழ் பழங்கற்கால பண்பாடு ஆ) இடைப் பழங்கற்கால பண்பாடு
இ) மேல் பழங்கற்கால பண்பாடு ஈ) தொல்பழங்கால பண்பாடு
**விடை: இ) மேல் பழங்கற்கால பண்பாடு**

10. மனிதர்களின் மூதாதையர்கள் .................... என்றழைக்கப்படுகின்றனர்.
அ) ஹோமினிட் ஆ) ஹோமோஹெபிலிஸ்
இ) ஹோமோ சேப்பியன்ஸ் ஈ) ஹோமினின்
**விடை: ஈ) ஹோமினின்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. .................... என்பவை மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள் ஆகும்.
**விடை: செல்ட்**
2. உலோக வேலை செய்பவர்கள் .................... எனப்பட்டனர்.
**விடை: கம்மியர்**
3. தூத்துக்குடி அருகே உள்ள சிவப்பு மணல் குன்றுகள் உள்ள பகுதி .................... .
**விடை: தேரி**
4. .................... என்பவை எரிமலைப்பாறைகள் அல்லது தீப்பாறைகள் ஆகும்.
**விடை: பசால்ட் பாறைகள்**
5. மாதிரிகளின் காலத்தைக் கணிக்க .................... கதிர்களை வெளிப்படுத்தி அறிகின்றனர்.
**விடை: காஸ்மோஜீனிக்**
6. .......... என்பவை நுண்கற்கருவிகள் மிகச் சிறிய கற்களில் உருவாக்கப்பட்ட செய்பொருட்கள் ஆகும்.
**விடை: மைக்ரோலித்**
7. .......... அருங்காட்சியகம் உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகம் ஆகும்.
**விடை: ஆஷ்மோலியன்**
8. புவியின் .......... அடுக்குகளில் மனித மூதாதையர்களின் எலும்புகளின் புதைபடிவங்கள் புதைந்துள்ளன.
**விடை: மேல்**
9. காலத்தால் முந்திய கற்காலக் கருவிகளை உருவாக்கியவர்கள்.................... .
**விடை: ஹோமினின்**
10. புவி சுமார் .................... ஆண்டுகளுக்கு முன் உருவனதாகக் கருதப்படுகிறது.
**விடை: 4.54 பில்லியன்**
11. கூரிய வெட்டுமுனை உள்ள கல்லாலான உளி .................... எனப்படும்.
**விடை: பியூரின்**
12. .................... தொல்லுயிரூழி காலத்தில் டைனோசர்கள் வாழ்ந்தன.
**விடை: இடைத்**
13. தொல் மானுடவியல் என்பது .................... குறித்து ஆய்ந்து கொள்ளும் இயலாகும்.
**விடை: பரிணாம வளர்ச்சி**


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

14. இரும்புக்காலத்தை .................. என்று அழைக்கப்படுகிறது.
**விடை: பெருங்கற்காலம்**

15. எண்ணங்கள் அனுபவங்களால் அறிவையும், புரிதலையும் பெறுவது .................... எனப்படும்.
**விடை: அறிவாற்றல்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. **கூற்று 1 :** எழுத்து முறையின் தோற்றம் மனித வரலாற்றின் முக்கியமான திருப்புமுனை ஆகும்.
**கூற்று 2 :** எழுத்து முறை அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் தொல்பழங்காலம் என்று குறிப்பிடப்படுகிறது.
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
இ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் சரி ஈ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் தவறு
**விடை : இ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் சரி**

2. **மனிதர்களின் தோற்றம் குறித்த அறிவியல் பூர்வமான ஆய்வுகள் கீழ்கண்ட எந்த காரணிகளால் சாத்தியமாகின்றன.**
   1. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு பிறகு ஏற்பட்ட தொல்பொருள் சேகரிப்பின் மீதான ஆர்வம் மற்றும் அருங்காட்சியங்கள் திறக்கப்பட்டமை.
   2. பாறை அடுக்குகள் நிலவியல் சார்ந்த கருத்துகள் ஆகியவற்றின் வளர்ச்சி.
   3. உயிரியல் பரிமாண குறித்த டார்வினின் கொள்கை
   4. தொடக்கக்கால எழுத்துகளை வாசிக்கத் தொடங்கியமை.

அ) அனைத்தும் சரி ஆ) 1, 3, 4 சரி
இ) 2, 3, 4 சரி ஈ) 1, 2, 4 சரி
**விடை: அ) அனைத்தும் சரி**

3. **கூற்று 1 :** இருமுகக் கருவிகள் சமபக்க உருவ அமைப்பைப் பெற்றுள்ளன.
**கூற்று 2 :** இருபுறமும் செதுக்கப்பட்டதால் இக்கருவிகளுக்கு இப்பெயர் இடப்பட்டது.
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
இ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் தவறு ஈ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் சரி
**விடை : ஈ) கூற்று 1 கூற்று 2 இரண்டும் சரி**

## IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பழங்கற்காலம் | அ) பொ.ஆ.மு. 1,300 முதல் பொ.ஆ.மு. 300 வரை |
| 2. | இடைக் கற்காலம் | ஆ) 20,00,000 ஆண்டுகள் முன்பு முதல் பொ.ஆ.மு. 8,000 வரை |
| 3. | புதிய கற்காலம் | இ) பொ.ஆ.மு. 8,000 முதல் பொ.ஆ.மு. 1,300 வரை |
| 4, | இரும்புக் காலம் | ஈ) பொ.ஆ.மு 300 முதல் பொ.ஆ. 300 வரை |
| 5. | பண்டைய வரலாற்று காலம் | உ) பொ.ஆ.மு. 2000 முதல் பொ.ஆ.மு. 1000 வரை |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | பழங்கற்காலம் | ஆ) 20,00,000 ஆண்டுகள் முன்பு முதல் பொ.ஆ.மு. 8,000 வரை |
| 2. | இடைக் கற்காலம் | இ) பொ.ஆ.மு. 8,000 முதல் பொ.ஆ.மு. 1,300 வரை |
| 3. | புதிய கற்காலம் | உ) பொ.ஆ.மு. 2000 முதல் பொ.ஆ.மு. 1000 வரை |
| 4, | இரும்புக் காலம் | அ) பொ.ஆ.மு. 1,300 முதல் பொ.ஆ.மு. 300 வரை |
| 5. | பண்டைய வரலாற்று காலம் | ஈ) பொ.ஆ.மு 300 முதல் பொ.ஆ. 300 வரை |


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## V. சுருக்கமான விடை தருக.

**1. மெருகிடுதல் என்றால் என்ன?**

- புதிய கற்கால மக்கள் கையாலோ அல்லது சக்கரத்தைக் கொண்டோ மட்பாண்டங்களைச் செய்தனர்.
- மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்னால் அவற்றைக் கூழாங்கற்கள் கொண்டு மெருகேற்றினார்கள். இதனை 'மெருகிடுதல்' என்பர்.

**2. கேரளாவில் காணப்படும் ஈம நினைவுச் சின்னங்களின் வகைகள் யாவை?**

கொடக்கல் அல்லது குடைக்கல், தொப்பிக்கல் மற்றும் பத்திக்கல் ஆகியவை கேரளாவில் காணப்படும் ஈம நினைவுச் சின்னங்கள் ஆகும்.

**3. பிறை நிலப்பகுதி என்றால் என்ன?**

எகிப்து, இஸ்ரேல்–பாலஸ்தீனம், ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி பிறை நிலவின் வடிவத்தில் உள்ளது. இது 'பிறை நிலப்பகுதி' (Fertile Crescent Region) எனப்படுகிறது.

**4. இயற்கைத் தேர்வு கோட்பாடு வரையறு.**

தங்களது சூழ்நிலைக்கு சிறந்த முறையில் தகவமைத்துக் கொள்ளும் உயிரினங்கள் பிழைத்து, அதிகமாக இனப் பெருக்கம் செய்து பல்கிப் பெருகும் செயல்முறை இயற்கைத் தேர்வு கோட்பாடு எனப்படும்.

**5. பனிக்காலம் என்றால் என்ன?**

தற்காலத்திற்கு 8,000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் பல பாகங்கள் பனியாலும் பனிப்பாளங்களாலும் மூடப்பட்டிருந்த காலம் பனிக்காலம் ஆகும்.

## VII. விரிவான விடையளிக்கவும்.

**1. பண்டைய தமிழகத்தின் பண்பாடு காலத்தையும் அதன் கூறுகளையும் பட்டியலிடுக.**

| பண்பாடு | காலம் | பண்பாட்டுக் கூறு |
|---|---|---|
| பழங்கற்காலம் | 20,00,000 ஆண்டுகள் முன்பு முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 8,000 வரை | கைக்கோடரி, வெட்டுக்கருவி.<br>வேட்டையாடுதல் – உணவுசேகரித்தல் |
| இடைக்கற்காலம் | கி.மு. (பொ.ஆ.மு.) 8,000 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 1,300 வரை | 1. நுண்கற்கருவிகள்<br>2. தாவர உணவுகளைச் சேகரித்தல்<br>3. விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடுதல்<br>4. உலோகம் பற்றி இவர்களுக்குத் தெரியாது. |
| புதியகற்காலம் | கி.மு (பொ.ஆ.மு.) 2,000 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 1,000 வரை | மெருகேற்றப்பட்ட கற்கோடரிகள்<br>நுண்கற்கருவிகள்<br>விலங்குகளைப் பழக்குதல்<br>பயிரிடுதல்<br>குழுக்களின் பெருக்கம்<br>வேட்டையாடுவோர் – உணவு சேகரிப்போர், மேய்ச்சல் சமூகத்தினர் என இருவிதமான குழுக்களும் ஒரே சமயத்தில் வாழ்ந்தன. |
| இரும்புக் காலம் | கி.மு. (பொ.ஆ.மு) 1,300 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 300 வரை | பெருங்கற்கால ஈமச்சடங்கு முறை<br>உணவு சேகரிப்போர், மேய்ச்சல் சமூகத்தினரும் ஒரே சமயத்தில் வாழ்தல்<br>குழுத் தலைவர் உருவாதல்<br>இரும்பின் பயன்பாடு அறிதல்<br>கருப்பு சிவப்பு மட்பாண்டகள், கருப்பு மட்பாண்டங்கள் உருவாக்குதல்<br>கைவினைத் திறன்களில் சிறப்பு நிபுணர்கள் உருவாகுதல் – குயவர்கள், கொல்லர்கள் |
| பண்டைய வரலாற்று மற்றும் சங்ககாலம் | கி.மு. (பொ.ஆ.மு.) 300 முதல் பொ.ஆ. 300 வரை | இரும்புக் கால மரபுகளோடு சேர, சோழ பாண்டிய மன்னர்களின் வளர்ச்சி, வீரர்களை வழிபடுதல், இலக்கிய மரபு, கடல்வழி வணிகம். |


Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

பாடசாலை

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com